**நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தல் செயற்றிட்டம் - கூறு 2 மற்றும் கூறு 3 - 2025**

---

நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தல் செயற்றிட்டம் - கூறு 2 மற்றும் கூறு 3 இன் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் 2024 சனவரி 31 ஆம் திகதியன்று கையொப்பமிடப்பட்ட 7418 - LK இலக்கக் கடன் உடன்படிக்கையின் 5.01 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் கால அளவு**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு இத்திட்டத்தின் நிறைவேற்று முகவராண்மையாகவும், இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் சார்பில் செயற்படும் இலங்கை மத்திய வங்கி இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தும் முகவராண்மையாகவும் விளங்குகின்றன.

வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் மீது கவனம் செலுத்தி, இலங்கையின் நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பின் நிதியியல் மற்றும் நிறுவனசார் இயலாற்றலை வலுப்படுத்துவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாக காணப்படுகின்றது. இச்செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் கூறு 1, 2 மற்றும் 3 என மூன்று (03) கூறுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் கூறு 2 மற்றும் கூறு 3 இற்காக 1,270 மில்லியன் ரூபாவிற்குச் சமனான 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு உடன்படப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டம் அதன் செயற்பாடுகளை 2024 சனவரி 31 ஆம் திகதியன்று ஆரம்பித்ததுடன், 2027 திசம்பர் 31 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்படுவதற்குக் திட்டமிடப்பட்டுள்ளது.

**1.3 அபிப்பிராயம்**

இச்செயற்றிட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் கூற்றினையும் மற்றும் அதன் குறித்துரைக்கப்பட்ட கணக்கின் கூற்றினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்றிட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான

பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. பௌதீகச் செயலாற்றுகை

### 2.1 அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள்

| கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2025 ஜீலை 1 முதல் 4 திகதி வரை நடத்தப்பட்ட உலக வங்கியின் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் ஆதரவுக் குழுவின் உத்தியோகபூர்வ செயற்பாட்டுக்குறிப்பின் பிரகாரம், இச்செயற்றிட்டம் அதன் கணக்கியல் பதிவுகளைப் பேணுவதற்குக் கணக்கியல் அமைப்பொன்றைப் பயன்படுத்துவது அவசியமாகும். எவ்வாறாயினும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் | நிதியியல் துறைப் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் செயற்றிட்டத்திற்கான (FSSNP) கணக்கியல் அமைப்பின் தேவைப்பாடு குறித்து 2024 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் (CBSL) தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திற்குத் (ITD) தெரிவிக்கப்பட்டிருந்தது. வளப் பற்றாக்குறை மற்றும் கணினியமைப்பின் தனிப்பயனாக்கல் தேவை | செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவானது 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்குரிய எஞ்சியிருக்கும் அனைத்துத் தரவுகளும் புதிய கணினியமைப்பிற்குள் முழுமையாக மாற்றப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும். |

போது கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கும் நிதிப் பதிவுகளைப் பேணுவதற்கும் இச்செயற்றிட்டம் தொடர்ந்து மைக்ரோசாப்ட் எக்செல் மென்பொருளையே பயன்படுத்தி வந்தது என்பது வெளிப்பட்டது.

காரணமாகப் பல சிக்கல்கள் எதிர்கொள்ளப்பட்டு அவை படிப்படியாகத் தீர்க்கப்பட்டன. அதன் விளைவாக, இக்கணினியமைப்பானது 2026 மார்ச் மாதத்தில் திருப்திகரமான சோதனை நிலையை எட்டியதைத் தொடர்ந்து அதன் பின்னர் தரவுகளை உள்ளிடுவதற்கு ஏதுவான நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.